வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 15.9.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பீகார் மாநிலம் பூர்ணியாவில், பல்வேறு வளர்ச்சி திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
- யுபிஐ உள்ளிட்ட இந்தியாவின் டிஜிட்டல் சகாப்தம், புரட்சிகரமான மாற்றங்களுக்கு அடிப்படையே தவிர, வெறும் தொழில்நுட்ப வளர்ச்சி அல்ல என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் படி, 12 சதவிகித வரி அடுக்கிலிருந்து, பல பொருட்கள், 5 சதவிகித அடுக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதால், பொருளாதாரம் பெருமளவில் ஊக்கம் பெற உள்ளது
- புதுச்சேரியில் மத்திய நிதி ஆதரவுத் திட்டங்களின் அமலாக்கம் குறித்து மத்திய மதிப்பீட்டுக் குழுவினர், இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமியை சந்தித்துப் பேசினர்.

<u>*ே□ாடி-பீகார்*</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பீகார் மாநிலம் . பூர்ணியா மாவட்டத்தில் இருந்து, மொத்தம் 40 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களைத் தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மத்தியிலும், பீகார் மாநிலத்திலும் உள்ள இரட்டை எஞ்சின் அரசு, மாநில மக்களின் வாழ்க்கையை எளிதாக்க தொடர்ந்து பாடுபட்டு வருவதாக, பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில்

அவர் கூறினார். புதிதாக கட்டடப்பட்டுள்ள பூர்ணியா விமான நிலையத்தை பிரதமர் திறந்து வைத்து, விமான சேவையை தொடக்கி வைத்தார். பீகாரில் அராரியா-கல்காலியா இடையே புதிதாக அமைக்கப்பட்டுள்ள ரயில் பாதை, மற்றும், வடகிழக்கு பீகார் பகுதிகளுக்கான வந்தேபாரத், அமிர்த பாரத் உள்ளிட்ட ரயில்களையும், தாமரை விதைகளின் உற்பத்தியை பெருக்குவதற்கான, தேசிய மக்கனா வாரியத்தையும், பிரதமர் தொடக்கி வைத்தார். விழாவின் போது பிரதமர் அடிக்கல் நாட்டிய திட்டங்களில், பாகல்பூரில், இரண்டாயிரத்து 400 மெகாவாட் அனல்மின் நிலையம் அமைக்கும் பணிகளும், கோசி-மேச்சி நதிகளின் இணைப்பு திட்டமும், அடங்கும்.

_ே□ாடி-டிஜிட்டல்_

ஜன்தன்-ஆதார்-மொபைல் வசதிகளின் அடிப்படையில், யுபிஐ, ஜெம், இ-நாம் உட்பட, கடந்த 10 ஆண்டுகளில் அரசு மேற்கொண்ட பல்வேறு முன் முயற்சிகளால், நாட்டில் டிஜிட்டல் புரட்சி ஏற்பட்டுள்ளது குறித்து, மத்திய அமைச்சர் திரு ராவ் இந்திரஜித் சிங், இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள கட்டுரையை, பிரதமர் திரு நரேந்திர மோடி பகிர்ந்து கொண்டுள்ளார். இந்தியாவின் டிஜிட்டல் சகாப்தம் புரட்சிகரமான மாற்றங்களுக்கு அடிப்படையே தவிர, வெறும் தொழில்நுட்ப வளர்ச்சி அல்ல என்று பிரதமர் கூறி உள்ளார்.

_சேவை விழா-ஸ்வச் பாரத்_

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மக்கள் சேவை, நல்லாட்சி என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர அயராது உழைத்து வருகிறது. ஸ்வச் பாரத் இயக்கத்தின் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கையில் அரசு கொண்டு வந்த மாற்றங்கள் குறித்து, இன்று, சேவைத் திருவிழா என்னும் இந்த சிறப்பு தொடரில் காண்போம். ..........

ஸ்வச் பாரத் இயக்கம் தொடங்கி 11 ஆண்டுகள் ஆகிவிட்டன....... கழிவறைகளைக் கட்டுவதன் மூலம் நாட்டில் தூய்மைப் புரட்சி ஒன்றை கொண்டு வருவது பற்றிய பேச்சு, டெல்லி செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து வெளியாகும் என யாருமே நினைத்து இருக்க முடியாதுதான்... ஆயினும், 2014-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் தேதி, பிரதமர் திரு நரேந்திர மோடி அதைத்தான் செய்தார்..........

(வாய்ஸ்-மோடி)

*சேவை விழா-ஸ்வச் பாரத்-*

ஸ்வச்சத்தா இயக்கம், நாட்டில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.... மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை உலகமும் ஒப்புக் கொள்கிறது. திறந்த நிலைக் கழிப்பிடங்களுக்கு முடிவு கட்டப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து, உலக புகழ்பெற்ற நேச்சர் பத்திரிக்கையில் அண்மையில், ஆய்வுக் கட்டுரை வெளியாயிற்று. நாட்டில் ஆண்டுக்கு 70 ஆயிரம் மரணங்களைத் தவிர்ப்பதில், புதிய மாற்றங்களால் மிகப் பெரிய வெற்றி கிடைத்து இருப்பதாக, அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக் கழகமும், ஒஹையோ மாகாண பல்கலைக் கழகமும் மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது. இத்திட்டத்தினால் குறிப்பாக பெண்களின் வாழ்வில் கண்ணியம் மேம்பட்டுள்ளது.

*சேவை விழா-ஸ்வச் பாரத்*

ஸ்வச் பாரத் இயக்கத்தின் கீழ் சுமார் 12 கோடி வீடுகளில் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளதால், நாட்டில், திறந்தநிலை கழிப்பிடங்களே இல்லாத நிலை உருவாகி உள்ளது. தற்போது நாட்டின் 75 சதவிகித வீடுகளுக்கு குழாய் மூலம் தூய குடிநீர் விநியோகிக்கப் படுகிறது. 2026-ஆம் ஆண்டிற்குள் நாட்டின் எல்லா நகரங்களையும், குப்பை இல்லாத

பகுதிகளாக மேம்படுத்த, ஸ்வச் பாரத் இயக்கத்தின் கீழ், இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, ஸ்வச் சர்வேக் ஷன் என்னும் தூய்மைக் கணக்கெடுப்பு பணிகளும், ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால், தூய்மையை பராமரிப்பதில், நகரங்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டி உருவாகி உள்ளது. சுத்தத்தை பராமரிப்பதில் மக்கள் பங்கேற்பும் அதிகரித்துள்ளது. இத்தகைய முயற்சிகளின் விளைவாக, உலகின் தூய்மை வரைபடத்தில் இந்தியாவின் நிலை, முன் எப்போதையும் விடக் கணிசமாக மேம்பட்டிருப்பதில், ஐயமில்லை.

## *ஜிஎஸ்டி-ஐந்து சதவிகிதம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை, டெல்லி செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து அறிவித்தார். சாதாரண மக்களின் வாழ்வை எளிதாக்கும் வகையில் பல்வேறு துறைகளுக்கான வரி குறைப்பை, இம்மாதம் 3-ஆம் தேதி ஜிஎஸ்டி சபை அங்கீகரித்து, பிரதமரின் தொலை நோக்கு பார்வையை நிறைவேற்றியது. எந்தெந்த பொருட்கள் மீது, 12 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது என்பதை, இன்றைய தொகுப்பில் பார்க்கலாம்....

## *ஜிஎஸ்டி-ஐந்து சதவிகிதம்*

மத்திய அரசு அறிவித்துள்ள அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் படி, இரண்டாயிரத்து 500-ரூபாய்க்கு மேற்படாமல் விலையுள்ள காலணிகள் மீது, 12 சதவிகித சரக்கு மற்றும் சேவை வரி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. கல், மரம் மற்றும் உலோக சிலைகள் மீதான வரியும், 12-ல் இருந்து, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. கண்ணாடி சிற்பங்கள், இரும்பு, அலுமினியம், பித்தளை

மற்றும் தாமிரக் கலைப் பொருட்கள் மீதும் இதேபோல வரிக்குறைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் நாட்டின் பொருளாதாரத்தில், சாதகமான பல தாக்கங்கள் ஏற்படும் என, வரி விதிப்பு மற்றும் கணக்கு தணிக்கை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக பண்டிகைக்கு முந்தைய நடப்புக் கால கட்டத்தில், ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், சாதாரண மனிதன் மீது வரிச்சுமை குறைந்து பொருளாதாரம் வெகுவாக வலுப் பெறும்.

<u>**புதுச்சேரி-□ருத்துவ முகாம்**</u>

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், வரும் 17-ஆம் தேதி புதுச்சேரியில், ஆரோக்கியமான பெண்களே குடும்பத்தின் பலம் என்னும் மத்திய அரசின் திட்டத்தை தொடக்கி வைக்கிறார். கம்பன் கலையரங்கில், முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில் நடைபெற உள்ள இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மற்றும், அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும், உயர் அதிகாரிகளும் பங்கேற்க உள்ளனர். புதுச்சேரியில், பெண்களுக்கான மாபெரும் சுகாதாரத் திருவிழா, வரும் 17-முதல் அக்டோர் 2-ஆம் தேதி வரை, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்களில் குறிப்பிட்ட தேதிகளில் நடைபெறும் என்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு பொது சுகாதார சேவைகள், புற்றுநோய் பரிசோதனை மற்றும், ஆலோசனைகள் வழங்கப்படும் என்றும் மாநில அரசின் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. 70 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் சிவப்பு அட்டைதாரர்களை, இலவச மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுதல், சுகாதார அடையாள எண் வழங்குதல் போன்ற சேவைகளும், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்பட உள்ளன.

**<u>சந்திப்பு</u>**

தேசிய தொழிலாளர் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கழகத்தின் துணை இயக்குநர் டாக்டர் இந்திரகுமார் தலைமையிலான மத்திய மதிப்பீட்டுக் குழுவினர், இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு ரங்கசாமியை சந்தித்து, மாநிலங்களுக்கான, மத்திய நிதி ஆதரவுத் திட்டங்களின் அமலாக்கம் பற்றிய, திஷா கண்காணிப்புக் குழுவின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினர். புதுச்சேரியில், மாவட்ட ஊரக முகமை மூலம் அமலாகும் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை துரிதப்படுத்தவும், பரந்துபட்ட அளவில் சிறப்பாக செயல்படுத்தவும், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி, மத்தியக் குழுவினரைக் கேட்டுக் கொண்டார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மாநில திட்ட மேலாளர் டாக்டர் பவானி இந்த சந்திப்பின் போது உடன் இருந்தார்.

**<u>புதுச்சேரி-அண்ணா</u>**

புதுச்சேரியில், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. ஒதியஞ்சாலை சந்திப்பில் உள்ள அன்னாரது சிலைக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி, பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே எஸ்பி ரமேஷ், திரு லட்சுமிகாந்தன், திரு பிரகாஷ்குமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**<u>பிஜேபி</u>**

புதுச்சேரியில், மாநில பிஜேபி சார்பில் இன்று நடைபெற்ற சிந்தனை அமர்வு கூட்டத்தில், கட்சியின் தேசிய அமைப்பு பொதுச் செயலர் திரு பி எல் சந்தோஷ், மத்திய தொழில் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, மத்திய சட்டத் துறை அமைச்சர் திரு அர்ஜுன்ராம் மேக்வால், மாநில பொறுப்பாளர் திரு நிர்மல் குமார் சுரானா உள்ளிட்டோர்

சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். 2026- ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் கட்சி செயல்பட வேண்டிய விதம் குறித்தும் தேசிய ஜனநாயக கூட்டணியை வலுப்படுத்துவது குறித்தும் இக்கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

<u>புதுச்சேரி-பல்கலைக்கழகம்</u>

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், பாரம்பரிய இயற்கை விவசாயிகள் திருவிழாவை துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு தொடக்கி வைத்தார். புதுச்சேரி மற்றும் அண்டை தமிழக பகுதிகளில், மொத்த விவசாயத்தில் 50 சதவிகித்தை 2030-ஆம் ஆண்டிற்குள், இயற்கை விவசாயமாக மாற்றும் நோக்கத்துடன், மாநில இயற்கை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கமும், கல்வி வளாகங்கள் மற்றும் சமூகங்களில் நீடித்த வளர்ச்சிக்கான ஊக்குவிப்பு அமைப்பும் இணைந்து, இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தன. 600-க்கும் மேற்பட்ட விவசாயிகள், தொழில் முனைவோர், ஆராய்ச்சியாளர்கள், மற்றும் மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

<u>கிரிக்கெட்</u>

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று இரவு துபாயில் நடைபெறும் ஏ பிரிவு போட்டியில், இலங்கை-ஹாங்காங் அணிகள் மோத உள்ளன. அபுதாபியில், இன்று மாலை நடைபெறும் மற்றொரு ஏ பிரிவு போட்டியில் டாஸ் ஜெயித்த ஓமன் அணியால், முதலில் ஆட பணிக்கப்பட்ட யுஏஇ அணி, சற்று முன் வரை 6.3--- ஓவர்களில், விக்கெட் இழப்பின்றி 52- ரன் எடுத்து இருந்து.

## வானிலை

வளிமண்டல சுழற்சிகள் காரணமாக இன்றைய தினம் விழுப்புரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருப்பத்தூர், சேலம், தர்மபுரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 21-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## யுபிஐ

யுபிஐ தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் தனிநபர்கள், இன்று முதல், குறிப்பிட்ட வகைப்பாடுகளைச் சேர்ந்த வணிகர்களுடன், ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் 10 லட்சம் ரூபாய் வரை, பணப் பரிவர்த்தனை செய்து கொள்ளலாம் என, அனுமதிக்கப் பட்டுள்ளது. 10 லட்சம் ரூபாய் தினசரி வரம்பிற்குள், ஒற்றைப் பரிவர்த்தனை மீதான உச்ச வரம்பும், 5 லட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. இந்த, குறிப்பிட்ட வகைப்பாடுகள் என்ற பட்டியலில், காப்பீடு, மூலதன சந்தை, அரசின் ஜெம் வணிகச் சந்தை உள்ளிட்ட துறைகள் இடம் பெற்றுள்ளன. ஆயினும், தனிநபர்களுக்கும்-தனிநபர்களுக்கும் இடையிலான பணப் பரிவர்த்தனைகள் மீதான, 1 லட்சம் ரூபாய் தினசரி உச்சவரம்பில் மாற்றமில்லை.